கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்) தென்காசி

முன்னிலை:- திருமதி.கோ. அனுராதா, L.L.M., M.L.S.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2023 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 26 ஆம் நாள் திங்கள்க்கிழமை

**இடைநிலை மனு எண்.3/2023**

அதன்

**அசல் வழக்கு எண்.411/2022**

அண்ணாமலை … மனுதாரர்/வாதி

..எதிர்..

அந்தோணி பீட்டர்ராஜ் … எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த இடைநிலை மனுவானது இன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.ஏ.அப்துல்மஜித் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர்.சுதாகர் அவர்களும் முன்னிலையாகி நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், இரு தரப்பு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

உத்தரவு

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 38 விதி 5 மற்றும் பிரிவு 151-ன் கீழ், மனுதாரர்/வாதிக்கு, எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து வசூலாக வேண்டிய பிராது தொகை ரூ.15,66,000/-ற்கு நீதிமன்றத்தில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தக்க ஜாமீன் கொடுக்கவும் தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட மனு தபசில் சொத்துக்களை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர் மனுதாரரிடம் புரோநோட்டின்பேரில் பெற்ற கடன் தொகை ரூ.13,50,000/-ஐ எதிர்மனுதாரரிடமிருந்து வசூலிப்பதற்காக அசல் வழக்கானது தாக்கல் செயப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய தொகையை மோசடி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட மனு தபசில் சொத்துக்களை அவருக்கு வேண்டியவர்களுக்கு மலரணையாக வில்லங்கப் பாராதீனம் செய்துவிட்டு நீதிமன்ற அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட அண்டை மாவட்டங்களுக்கு சென்றுவிடப்போவதாக எதிர்மனுதாரர் பிரஸ்தாபித்து வருகிறார். எதிர்மனுதாரர் சொத்துக்களை அவ்வாறு விற்பனை செய்துவிட்டால் மனுதாரருக்கு, எதிர்மனுதாரரிடமிருந்து வரவேண்டிய தொகையை வசூலிக்க இயலாமல் போய்விடக் கூடும். எனவே, பிராது தொகை ரூ.15,66,000/-ற்கு தகுந்த ரொக்க ஜாமீன் கொடுத்து போகும்படிக்கும்,

தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட தபசில் சொத்துக்களை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய உத்தரவிடக்கோரியும் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிருரையின் சுருக்கம்**:-

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. மனுச் சங்கதிகள் உண்மையானவைகள் இல்லை. உண்மையில் மனுதாரர் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள புரோநோட்டானது சட்ட விரோதமாக உருவாக்கப்பட்டது. எதிர்மனுதாரர் கடந்த 2022 ஆம் ஆண்டு ஆழ்வார்குறிச்சி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் கடன் பெற்று தபசில் சொத்தை அடமானம் வைத்துள்ளார். மனுதாரரின் உறவினர் திரவியம் என்பவர் எதிர்மனுதாரரின் பூர்த்தி செய்யப்படாத காசோலைகளை வைத்து மிரட்டி கந்து வட்டி வசூல் செய்து அச்சுறுத்தி வந்த நிலையில் அவருக்காக மனுதாரர், எதிர்மனுதாரரையும், எதிர்மனுதாரரின் குடும்பத்தாரையும் கொலைமிரட்டல் செய்து எதிர்மனுதாரர் பெறாத கடனுக்கு சட்டத்திற்கு புறம்பாக புரோநோட்டை உற்பத்தி செய்துள்ளார். எதிர்மனுதாரர் தபசில் சொத்துக்களை விற்பனை செய்து விட்டு வேறு இடத்திற்கு சென்று விட முயற்சிக்கவும் இல்லை. எதிர்மனுதாரர் தபால்துறையில் பணிபுரிந்து வருகிறார். எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்

"மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

5. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **பிரச்சனைக்கான தீர்வு**:-

இந்த மனுவின் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், எதிர்மனுதாரர் மனுதாரரிடம் புரோநோட்டின்பேரில் பெற்ற கடன் தொகை ரூ.13,50,000/-ஐ எதிர்மனுதாரரிடமிருந்து வசூலிப்பதற்காக அசல் வழக்கானது தாக்கல் செயப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய தொகையை மோசடி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட மனு தபசில் சொத்துக்களை அவருக்கு வேண்டியவர்களுக்கு மலரணையாக வில்லங்கப் பாராதீனம் செய்துவிட்டு நீதிமன்ற அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட அண்டை மாவட்டங்களுக்கு சென்றுவிடப்போவதாக எதிர்மனுதாரர் பிரஸ்தாபித்து வருகிறார். எதிர்மனுதாரர் சொத்துக்களை அவ்வாறு விற்பனை செய்துவிட்டால் மனுதாரருக்கு, எதிர்மனுதாரரிடமிருந்து வரவேண்டிய தொகையை வசூலிக்க இயலாமல் போய்விடக் கூடும். எனவே, பிராது தொகை ரூ.15,66,000/-ற்கு தகுந்த ரொக்க ஜாமீன் கொடுத்து போகும்படிக்கும், தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட தபசில் சொத்துக்களை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய உத்தரவிட வேண்டியது அவசியம் என்றும் வாதிட்டிருக்கிறார்.

7. எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள புரோநோட்டானது சட்ட விரோதமாக உருவாக்கப்பட்டது. எதிர்மனுதாரர் கடந்த 2022 ஆம் ஆண்டு ஆழ்வார்குறிச்சி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் கடன் பெற்று தபசில் சொத்தை

அடமானம் வைத்துள்ளார். மனுதாரரின் உறவினர் திரவியம் என்பவர் எதிர்மனுதாரரின் பூர்த்தி செய்யப்படாத காசோலைகளை வைத்து மிரட்டி கந்து வட்டி வசூல் செய்து அச்சுறுத்தி வந்த நிலையில் அவருக்காக மனுதாரர், எதிர்மனுதாரரையும், எதிர்மனுதாரரின் குடும்பத்தாரையும் கொலைமிரட்டல் செய்து எதிர்மனுதாரர் பெறாத கடனுக்கு சட்டத்திற்கு புறம்பாக புரோநோட்டை உற்பத்தி செய்துள்ளார். எதிர்மனுதாரர் தபசில் சொத்துக்களை விற்பனை செய்து விட்டு வேறு இடத்திற்கு சென்று விட முயற்சிக்கவும் இல்லை. எதிர்மனுதாரர் தபால்துறையில் பணிபுரிந்து வருகிறார் என்பதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதிட்டிருக்கிறார்.

8. இம்மனுவின் மனுதாரர் இந்த மனுவை தபசில் சொத்துக்களை தீர்ப்புக்கு முன்ஜப்தி செய்யக் கோரி தாக்கல் செய்திருக்கிறார். மனுதாரரின் பிரதான வாதமானது எதிர்மனுதாரர் மனுதாரரின் கடனை மோசடி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் அவருக்குப் பாத்தியப்பட்ட தபசில் சொத்துக்களை மலரணையாக கிரையம் செய்துவிட்டு நீதிமன்ற அதிகாரவரம்பிற்கு அப்பாற்பட்ட இடத்திற்கு சென்றுவிடப்போவதாக பிரஸ்தாபித்து வருவதாகவும், எதிர்மனுதாரர் தபசில் சொத்துக்களை விற்பனை செய்து விட்டால் மனுதாரரின் கடன் தொகையை வசூலிக்க இயலாமல் போய்விடக் கூடும். எனவே தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய வேண்டியது அவசியம் என்பதாகும்.

9. இவ்வழக்காவணங்களைப் பரிசீலனை செய்ததில் வழக்குகோப்புடன் உள்ள வில்லங்கச் சான்றிதழைப் பரிசீலித்ததில் வழக்குச் சொத்தானது ஏற்கனவே பாரத ஸ்டேட் வங்கி ஆர்ஏசிசி திருநெல்வேலியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் தாவா புரோநோட்டினை கடுமையாக ஆட்சேபித்து கட்சி செய்யப்பட்டுள்ளது. எனவே தபசில் சொத்தானது ஏற்கனவே அடமானம் வைக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது தபசில் சொத்தைப் பொறுத்து தீர்ப்புக்கு முன் ஜப்தி கோரும் பரிகாரத்தை வழங்க இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தப்பட்டு, 2023 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 26 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்) ஜி. அனுராதா
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**மனுதாரர், தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்**

இல்லை

(ஒம்) ஜி. அனுராதா
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

-----------------------------------------------------------------------------------------

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

இடைநிலை மனு எண்.3/2023

அதன்

அசல் வழக்கு எண்.411/2022

உத்தரவு (நேரிய)

நாள்: 26.06.2023

-----------------------------------------------------------------------------------------